## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட மஹாவலி கால்நடை தொழில்முயற்சிகள் (தனியார்) கம்பனியின் (''கம்பனி'') 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து கம்பனியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும், நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றவாறு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயார் செய்யப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரஅளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி

இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு பற்றிய கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது. .

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிறுவனத்தினால் வரிக்கு முன்னரான இலாபம் கணக்கிடப்படும் போது ரூபா 4,007,643 ஆன | 2020 ஆம் ஆண்டின் இறுதி நிதிக் கணக்குகளில் திருத்தப்படும் | கூற்றுக்கள் சரியான |

| | | | |
|---|---|---|---|
| | மீள்மதிப்பீட்டு இலாபமும் வரிக்கு முன்னரான இலாபத்திற்கு சேர்க்கப்பட்டிருப்பதனால் வரிக்கு முன்னராக இலாபம் அப் பெறுமானத்தில் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | என தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். | தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | விற்றல் கிரயம் கணக்கிடப்படும் போது ரூபா 9,210,590 ஆன இறுதி மூலதன உயிர் இருப்பும் உள்ளடக்கப்பட்ட காரணத்தினால் மொத்த இலாபம் அப் பெறுமதியில் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளில் திருத்தப்படும் என தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். | நிதிக் கூற்றுக்கள் சரியான தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | காசுப் பாய்ச்சல் கூற்றில் செயல்பாட்டு மூலதன மாற்றங்களின் கீழ் காட்டப்பட வேண்டிய ஆண்டின் வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டிய பெறுமதிகளின் வித்தியாசங்களின் தாக்கத்தின் அடிப்படையில் காசு வருகையாக காட்டப்பட வேண்டிய ரூபா 2,506,495 ஆன தொகை காசு வெளியேற்றமாக காட்டப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளில் திருத்தப்படும் என தெரிவிக்கின்றேன். | காசுப் பாய்ச்சல் கூற்றை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2 பண்ணைகளுக்கு தொடர்புடைய கட்டிட தேய்மானம் ரூபா 238,750 கூடுதலாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | கட்டிட தேய்மானம் கூடுதலாக கணக்கிடல் 2020 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளில் திருத்தப்படும் என தெரிவிக்கின்றேன் | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமங்களின் 7.4 (அ) உறுப்புரையின் பிரகாரம் இருப்பு மாற்றங்கள் காசுப் பாய்ச்சல் கூற்றில் மேற்புறத்தில் வேறாக முன்வைக்கப்பட வேண்டியிருப்பினும், ரூபா 1,853,393 ஆன இருப்பு மாற்றங்கள் காசுப் பாய்ச்சல் கூற்றில் வேறாக காட்டப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் இருப்பு மாற்றல்கள் காசுப் பாய்ச்சல் கூற்றில் வேறாக காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றேன். | நியமத்தின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமங்களின் 7.4(ஈ) உறுப்புரையின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் காசு வெளியேற்றமாக கருதப்பட வேண்டிய ரூபா 422,922 ஆன பணிக்கொடை செலுத்தல் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளில் திருத்தப்படும் என அறியத்தருகின்றேன். | நியமத்தின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 தொங்கல் கணக்குகள்

| விடயம் | தொகை (ரூபா) | தொங்கலில் உள்ள காலப்பகுதி | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| 2015 ஆம் ஆண்டு முதல் காணப்பட்டு வருகின்ற, நிதி நிலைமைக் கூற்றில் வர்த்தக கடன்பட்டோரின் கீழ் காட்டப்பட்டுள்ள தொங்கல் கணக்கு மீதி தீர்ப்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 13,010,825 | 04 வருடங்கள் | தொங்கட் கணக்கு 2020 ஆம் ஆண்டில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றேன். | தொங்கட் கணக்கு தீர்ப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| | விடயம் | தொகை (ரூபா) | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | பொது சேர்மம் | | | | |
| | மஹாவலி பொருளாதார முகவராண்மை | 403,962,731 | பெறுமதியை உறுதி செய்து கொள்ளக்கூடிய சான்று | இப் பெறுமதிகள் தொடர்பிலான எந்தவொரு சான்றும் கம்பனியிடம் இல்லை. 1999 ஆம் ஆண்டில் கால்நடை பிரிவு கம்பனியாக நியமிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலும் இந்த மீதிகள் முன் கொண்டுசெல்லப்பட்டுள்ளது. | நிலுவையை உறுதி செய்பவை கணக்காய்வுக்கு நேரடியாகப் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.. |
| | கொத்மலை பால் அபிவிருத்தி நிதியம் | 2,900,000 | | | |
| | ஐரோப்பிய பொருளாதார ஆணைக்குழுவின் மூலதனக் கொடை | 3,583,706 | முலதனக் கொடைகளாக கணக்குகளில் பதிவு செய்வதில் ஏற்புடைய ஆவணங்கள மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் வரி சான்றிதழ்கள் | | |
| | வெளிநாட்டு உதவி | 5,729,782 | | | |
| **(ஆ)** | செலுத்தப்பட வேண்டிய தேசிய கட்டிட வரி | 285,185 | | வரும் ஆண்டுகளில் உறுதி செய்யும் ஆவணங்கள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத் தருகின்றேன். | நிலுவையை உறுதி செய்பவை கணக்காய்வுக்கு நேரடியாகப் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.. |
| | செலுத்தப்பட வேண்டிய பெறுமதி சேர்க்கப்பட்ட வரி | 2,991,095 | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **(இ)** | கால்நடை உற்பத்தி, சுகாதார திணைக்கள்திற்கு செலுத்த வேண்டிய முற்பணம் தம்மன்ன இடை பண்ணை மீதி | 165,600<br>163,192<br>818,177 | மீதியை உறுதி செய்வதற்கான சான்றுகள் | கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார அமைச்சுக்கு செலுத்தப்பட வேண்டிய மீதிகள் உறுதி செய்யும் ஆவணங்கள் பெற்றுக் கொள்வதற்கு முடியாமையினால், 2020 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபை அனுமதி பெறப்பட்டு பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றேன் 2020 ஆம் ஆண்டில் சான்றுகள் முன்வைக்கப்படும் என அறித்தருகின்றேன்.<br>தம்மன்ன பண்ணை மீதி 2020 ஆம் ஆண்டில் திருத்தப்படும் என அறியத்தருகின்றேன். | நிலுவையை உறுதி செய்பவை கணக்காய்வுக்கு நேரடியாகப் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்..<br>. |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2010 ஆம் ஆண்டு நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூலங்கள் அமைச்சுக்குப் பொறுப்பளிக்கப்பட்டிருந்த நிராவிய பண்ணைக்கு உரித்தானதாக இருந்த ரூபா 5,820,430 ஆன கால்நடை இருப்பின் பெறுமதி மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | தொடர்ச்சியாக இது தொடர்பாக கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதுடன், 2020 ஆம் ஆண்டில் இந்த மீதி அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றேன். | பெற வேண்டிய நிலுவை அறவிடப்படுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2015 ஆம் ஆண்டில் மேற்கொண்ட சம்பளத் திருத்தத்திற்கு அமைய ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 6,893,711 ஆன நிலுவைச் சம்பளம் மற்றும் அதற்குரிய ரூ. 1,817,553 ஆன ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கான பங்களிப்புக்கு ஒதுக்கங்கள் செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வு ஆண்டின் இறுதி வரை அவை செலுத்தப்பட்டிருக்கவில்லை. | அரச தனியார் பங்குடைமை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இந்த ஒதுக்கீடுகள் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றேன். | செலுத்த வேண்டிய பணம் செலுத்துவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2013 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பணம் முறையாக ரூபா 15,047,670 ஆன மற்றும் ரூபா 505,026 ஆன பங்களிப்புத் தொகை செலுத்தப்படாது இருப்பதனால் எதிர்காலத்தில் கம்பனி மிகைக் கட்டணம் செலுத்த வேண்டி ஏற்படலாம் என்பது அவதானிக்கப்பட்டது | அரச தனியார் பங்குடைமை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இந்த ஒதுக்கீடுகள் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றேன்.. | செலுத்த வேண்டிய பணம் செலுத்துவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 02. நிதி மீளாய்வு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 4,663,531 ஆன நட்டம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 4,428,901 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம், நிதி விளைவுகளில் ரூபா 234,630 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு கம்பனியின் தொழில் நடவடிக்கைகளை மீள்ஒழுங்குபடுத்தாமை பிரதான காரணமாகியிருந்தது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்றிறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) கம்பனியின் குழுமம்சார் நிறுமன பத்திரத்தில் 12 நோக்கங்கள் குறிப்பிடப்பட்டிருப்பினும், கம்பனியின் பண்ணைகளில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளல், மொத்த மற்றும் சில்லறையாக கோழி கட்டுப்பாடு மேற்கொள்ளல், விவசாயிகளுக்கு கோழி கட்டுப்பாட்டுக்காக தேவையான உணவு உற்பத்தி, பண்ணை பன்றிகள் கோழிகள் போன்ற | இந்த நோக்கம் நிறைவேற்றப்படுவதற்காக அரச தனியார் பங்குடைமையொன்று ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைள் எடுக்கப்படுகின்றது. | குழுமம்சார் நிறுமன பத்திரத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விலகுகளின் இனத்தை பெருக்குதல், விற்றல், மேம்படுத்தல், தயாரித்தல் மற்றும் ஏற்றுமதி செய்தல் நடவடிக்கைகள் மற்றும் பழங்கள், தானியங்கள் போன்ற வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளல் போன்ற நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிராததுடன், பசுக்கள், கோழிகள், பன்றிள் மற்றும் ஆடுகள் கட்டுப்பாடு சிறிய அளவில் மற்றும் பாலுடன் தொடர்புடைய உற்பத்திகள் மட்டும் மேற்கொள்ளப்பட்டு இருந்தது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் கால்நடை பிரிவின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த செயற்பாடுகளின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி உண்மையான உற்பத்தியுடன் இணக்கம் செய்யும் போது பொய்லர்ஸ் கோழி இறைச்சி உற்பத்தி 22 சதவீதமும், பன்றி இறைச்சி உற்பத்தி 10 சதவீதமும், ஆடுகள் வளர்த்தல் 24 சதவீதமும் ஆக குறைந்த பெறுமதிகளை கொண்டிருந்தன. | உற்பத்திகள் களஞ்சியப்படுத்துவதற்கு குளிர்சாதனம் இல்லாமையினால் மற்றும் விலங்குகள் வளர்க்கின்ற இடங்கள் பாழடைந்த நிலையில் காணப்படுகின்றமையினால் இந்த நிலைமை உருவாகியுள்ளது. அரச தனியார் பங்குடைமை வியாபாரம் நிறைவடைந்த பின்னர் இந்த நிலைமை தவிர்க்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடையப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | கம்பனியினால் தற்போது பயன்படுத்தப்படுகின்ற இலங்கை மஹாவலி அதிகார சபைக்கு சொந்தமான ரூபா 3,162,812 ஆன 04 வாகனங்கள் மற்றும் கம்பனியின் பிரதான அலுவலகம் அமைந்துள்ள மஹாவலி அதிகாரசபைக்கு சொந்தமான தெமட்டகொடை பிரதேசத்தில் அமைந்துள்ள காணிகள் கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் கீழ் 14,929.159 ஆக காட்டப்பட்டிருப்பினும் இச் சொத்தை கம்பனிக்கு கையகப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வாகனம் 2020 ஆம் ஆண்டில் கையகப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றேன். தெமட்டகொடையில் அமைந்துள்ள காணியின் பெறுமதி இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு மாற்றப்படுவதற்கு 2020 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றேன். | பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களின் உரிமை கம்பனிக்கு கையகப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கிராதுக்கோட்டை பண்ணையினுள் அமைந்துள்ள பால் தயாரிப்பு ஆலை அரம்பிக்கப்பட்ட 1986 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படுகின்ற | இந்த நிலைமை தீர்க்கப்படுவதற்கு அரச தனியார் பங்குடைமை நடவடிக்கைகள் நிறைவு | உற்பத்தியின் போது சுகாதார பாதுகாப்பு பிரச்சனைகள் உருவாகுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரங்களின் ஊடாக பால் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், தொழிற்சாலையின் நில டைல்கள் உடைந்து காணப்படல், கூரை பழமையாதல் மற்றும் மழை நீர் தொழிற்சாலைக்குள் வரல், வடிகால் அமைப்பு பழமையாகல், உள்ளக சுத்திகரிப்பு அமைப்பு பலவீனமாக இருத்தல் போன்ற காரங்களினால் உற்பத்திகளின் சுகாதார பாதுபாப்பு தொடர்பாக பிரச்சனைகள் எழுந்துள்ளன. | செய்யப்பட்டதன் பின்னர் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறியத்தருகின்றேன். | காரணமான விடயங்கள் திருத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | கம்பனிக்கு சொந்தமான கிராதுகோட்டை பண்ணை விலங்கு கட்டுப்பாடு பயிற்சி மத்திய நிலையமாக மாற்றம் செய்யும் நோக்கத்தில் மஹாவலி அதிகார சபையின் “சீ” வலையத்தினால் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் ரூபா 12,501,900 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட பசுபண்ணை, ஆடுபண்ணை உட்பட நிர்மாணிப்பு மற்றும் பொருட்கள் ரூபா 8,967,600 இற்கு பெறுமதி இடப்பட்டு 2016 பெப்ரவரி 08 ஆம் திகதி இந்த கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருப்பினும், இந்த நிர்மாணம் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கான குறித்த திட்டமொன்று அல்லது முறைமையொன்று கம்பனியிடம் இல்லாமையினால், கையளிக்கப்பட்ட திகதியிலிருந்து அந்த சொத்து செயற்திறனற்றதாக இருந்தது. | இந்த சொத்து பயன்படுத்துவதற்கு விலங்குகள் கொள்வனவு செய்வதற்கு மூலதன திறன் கம்பனியிடம் இல்லாமையினால், அரச தனியார் பங்குடைமை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இந்த சொத்துக்கள் முறையாக பயன்படுத்தப்படு என அறியத்தருகின்றேன். | இந்த நிர்மாணிப்பு பயன்படுத்தப்படுவதற்காக முறைகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | 2016 ஆம் ஆண்டின் சொத்துக்கள் சரிபார்த்தலின் போது அகற்றல் செய்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்த ரூபா 859,256 பெறுமதியுடைய குறைப் பயன்பாட்டுடைய பொருட்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அகற்றல் செய்யப்பட்டிராததுடன், மீளாய்வாண்டில் அக் குறைப்பயன்பாட்டுடைய பொருட்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | அகற்றல் செய்யப்பட வேண்டிய பொருட்கள் 2020 ஆம் ஆண்டில் அகற்றல் செய்து நிறைவு செய்யப்படும் என அறியத்தருகின்றேன். | குறைப்பயன்பாட்டுடைய பொருட்கள் அகற்றல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |